**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., L.L.M.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19ம் நாள் புதன்கிழமை

**OS.No.41/2021**

**(TNTM03000059/2021)**

1. P.A.Sethurathinam(Died)
2. S.Gandhimathi
3. S.Arunachalam
4. S.Parimala
5. V.Geetha ...Plaintiffs

-Vs-

1. P.Dhatchayani
2. Gnnanambal(Died)
3. Sub Registrar, Arni ... Defendants

இவ்வழக்கு என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சரவணன்,B.Com.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.D..சந்திரசேகரன்,B.A.B.L., 3ம் பிரதிவாதி தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.K.R.ராஜன், அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு நிலுவையில் இருந்தபோது இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**Order 7 Rule 10 CPCன் படியான உத்தரவு**

தாவா வழக்கு, 2ம் பிரதிவாதி இறந்த அருணாச்சலத்தின் சட்டப்படியான மனைவி இல்லை என்று விளம்புகை செய்யவும், 'A' மற்றும் 'B' அட்டவணை சொத்துக்கள் வாதிகளுக்கு உரிமையானது என விளம்புகை செய்யவும், 'A' மற்றும் 'B' அட்டவணை சொத்துக்களை வாதிகள் அனுபவம் செய்வதை 1ம் பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும், 24.12.2020 தேதியிட்ட ஆவண எண்.9208/2020 செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என விளம்புகை செய்யவேண்டியும், 1, 2 பிரதிவாதிகள் வழக்கு சொத்துக்களை பொறுத்து ஆவணங்கள் பதிவு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும், ஆவண எண்.9208/2020

செல்லாது என்று 3ம் பிரதிவாதி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யவேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளை வேண்டியும் வழக்கு செலவுத்தொகை வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மாண்புமிகு திருவண்ணாமலை, மாவட்ட முதன்மை நீதிபதி, ஆரணி ,சார்பு நீதிமன்றத்தில் ஆண்டு ஆய்வு செய்தபோது வழக்கு சொத்துக்கள் உரிய முறையில் மதிப்பீடு செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டிருந்த நிலையில், 23.03.2023 தேதியிட்ட இந்நீதிமன்ற விடுவி எண்.372/2023 மூலம் check slip வாதி தரப்பு வழக்கறிஞருக்கு வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில், வழக்கு சொத்துக்களுக்கான அரசு வழிகாட்டி(Guide line) மதிப்புப்படி மதிப்பீடு செய்யப்பட்டு வழக்குரையை திருத்தம் செய்ய வாதி தரப்பில் I.A.No.4/2024 தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு 16.10.2025ம் தேதி இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது. வழக்கு சொத்துக்களின் மதிப்பு உரிய முறையில் மதிப்பீடு செய்யப்பட்டதில் வழக்கு சொத்துக்களின் 'A' ஷெட்யூல் சொத்து மதிப்பு ரூ.58,10,180/–, 'B' ஷெட்யூல் சொத்து மதிப்பு ரூ.8,60,950/– 'A' மற்றும் 'B' அயிட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூ.66,71,130/– ஆக மதிப்பீடு செய்து அதற்குரிய நீதிமன்ற கட்டணமாக ரூ.1,00,427/– மாக செலுத்தப்பட்டுள்ளது. (வழக்கு தாக்கல் செய்யபோது ரூ.3090/–நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. வழக்குரை திருத்தம் செய்த பிறகு மீதமுள்ள நீதிமன்ற கட்டணம் ரூ.97,337/– செலுத்தப்பட்டுள்ளது. மொத்தம் நீதிமன்ற கட்டணமாக ரூ.1,00,427/– மாக செலுத்தப்பட்டுள்ளது).

3. வழக்குரை திருத்தம் செய்யப்பட்ட பிறகு வழக்கு சொத்துக்களின் மதிப்பு ரூ.10,00,000/–க்கு மேல் இருப்பதால் இந்த வழக்கை நடத்த இந்நீதிமன்றத்திற்கு பண அதிகார வரம்பு இல்லை. எனவே உரிய நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய Order 7 Rule 10 CPCன் படி உத்தரவிட்டு வழக்குரை திருப்பப்படுகிறது(Plaint Returned).

4. வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதி 22.03.2021, வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி 27.03.2021 ஆகும். இந்நீதிமன்றம் வழக்குரையை திருப்பும் தேதி 19.08.2026. இன்றைய தேதியிலிருந்து 1 மாத காலத்திற்குள் உரிய நீதிமன்றத்தில் வழக்குரை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.08.19 17:41:48 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.